
# கொள்ளை போகும் பொதுச் சுகாதாரம்... இலாபமே கண்ணாக!

ஒன்ராறியோ மக்கள் நூறாண்டுகளுக்கு மேலாக நன்கொடையாகவும் வரிகளாகவும், நிதித் திரட்டல்களாகவும் தன்னார்வலர்கள் மூலமும் பங்களித்து உருவாக்கியதே பெருமைப்படக் கூடிய எமது பொதுச் சுகாதாரம்.

பொது சுகாதாரத்துக்கு நிதியளிப்பதை குறைத்து, சேவைகள் வழங்குவதை நெருக்கடிக்குள்ளாக்கி, நெருக்கடிக்கு தள்ளி, மக்களுக்கான சுகாதாரத் தேவைகளை பொது சுகாதாரத்தால் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளுவதன் மூலமே பொதுச் சுகாதாரத்தைத் தனியார் மயமாக்குவது என்பது சாத்தியமாகும். அதைத்தான் செய்கின்றார்கள்.

தனியார் மயமாக்குதல் என்பது மக்கள் விரோதத் திட்டம், இது சில தனியார், கார்ப்பரேட் நிறுவனங்களை கொள்ளை லாபம் ஈட்டவைப்பதற்காக சாதாரண ஒன்ராறியோ மக்களின் ஆரோக்கியத்தையும் நலன்களையும் காவு வாங்கும்.

## கனடாவில் பொதுச் சுகாதாரத்துக்கு குறைந்தளவு நிதி ஒதுக்குவது ஒன்ராறியோவே!




$821 per person less x 15 million people in Ontario = $12.3 billion less

நிறுத்தவும் குறைக்கவும்பட்ட ஒவ்வொரு சேவையும் தனியார் வசமாக்கப்பட்டுள்ளது. இது தற்செயலானது இல்லை! திட்டமிட்டுச் செய்யப்பட்டது.

பிற மாகாணங்கள் செய்யும் நிதி ஒதுக்கீட்டின் சராசரியை ஒன்ராறியோவும் செய்தாலே மேம்பட்ட சேவையை பொதுத்துறையின் கட்டுப்பாட்டிலேயே வழங்கமுடியும்.

## பொது சுகாதாரத்தை தனியார் வசப்படுத்திக்கொண்டு கனடாவிற்கு ஆதரவாக இருப்பதாக நாடகமாட முடியாது.

முன்னேறிய நாடுகளில் அமெரிக்காவே அதிகம் தனியார் மயப்படுத்தப்பட்ட சுகாதார அமைப்பைக் கொண்டுள்ளது. அவர்கள் இதற்காக இருமடங்கு பணம் செலுத்தியும் தேவையான சேவைகளைப் பெற முடியவில்லை.
சேவைகளுக்காக நீண்டநேரம் காத்திருத்தல், அதிக கட்டணம், வீண் செலவு, பெருமளவில் சேவைகள் நிராகரிக்கப்படல், சேவைகளுக்கு மேலதிகமாக கட்டணம் செலுத்தல் போன்ற நிலைகள் லாபத்தையே நோக்காகக் கொண்டியங்கும்போது நடக்கின்றன.
அமெரிக்காவில் வங்குரோத்துகளுக்கு பிரதான காரணமாக மருத்துவச் செலவுகளே இருக்கின்றன. ஆண்டுதோறும் 56 மில்லியன் அமெரிக்கர்கள் மருத்துவக் கடன் பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள், இது கனடாவின் மொத்த மக்கள்தொகையை விட அதிகம்

மேலும் தகவலுக்கு இங்கு ஸ்கேன் செய்யுங்கள்

# கவலைக்கிடமான நிலை




## வாக்களிக்கத் தவறாதீர்!

நம் பொது சுகாதாரத்தைக் காக்கவும் மேம்படுத்தவும், இல்லையெனில் அதை இழந்துவிடுவோம்

தயவுசெய்து விழிப்புடன் இருங்கள். வெற்றுச் சொற்களை நம்பவேண்டாம். ஆதாரங்களைத் தேடிப்பாருங்கள்.

**Ontario Health Coalition**

பொது மருத்துவத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும்
www.StopForProfitHealthcare.ca

# ஃபோர்ட் சொல்வதை நம்பாதீர்கள்; அவர் செய்தவற்றையே பாருங்கள்!

ஃபோர்ட் அரசு கடந்த ஆண்டில் விளம்பரத்திற்காக **103.5** மில்லியன் மக்கள் பணத்தை செலவிட்டுள்ளது. இது இதுவரை ஏற்பட்ட மிக உயர்ந்த தொகை என்று ஒன்ராறியோ கணக்காய்வு அதிகாரி தெரிவிக்கிறார், மேலும் அதிகமான விளம்பரங்களில் தம்மைப் பற்றி பிரசாரம்தான் செய்துள்ளார்கள். அவர்களின் உண்மையான சாதனைகளைப் பார்த்து பொதுச் சுகாதாரத்தின் தேவையையும் கருத்திற்கொண்டு வாக்களியுங்கள்.


## பொது சுகாதாரத்திற்குப் போகவேண்டிய பில்லியன் கணக்கான வரிப்பணம் லாபநோக்கிலான நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது




எமது பொது மருத்துவமனைகளில் தேவையான பணியாளர்களை பணிக்கமர்த்துவதற்கான நிதியின்மை காரணமாக அறுவை சிகிச்சை அறைகள் இரவு நேரத்திலும் வார இறுதி நாட்களிலும் மூடப்படுகின்றன. ஆயினும் ஃபோர்ட் அரசு தனியார் மருத்துவ நிலையங்களுக்கான நிதியுதவியை 200% இற்கு மேலாக அதிகரித்துள்ளது. எமது மருத்துவமனைகள் நோயாளிகளை நீண்ட நேரம் காத்திருக்க வைத்தும், சேவைகளை நிறுத்தியும், நிரந்தர உள்ளூர் பணியாளர்களை நியமிக்காமல் லாப நோக்கமுள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து பணியாளர்களை இரட்டிப்பு செலவில் தற்காலிகப் பணியாளர்களாக பணிக்கமர்த்தவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

## அரசியல் தொடர்புகள் உள்ள தனியார் மருத்துவமனை செய்யும் அறுவை சிகிச்சைகளுக்கு இரு மடங்கு நிதியை ஃபோர்ட் அரசு வழங்கியுள்ளது.

அறுவை சிகிச்சை செலவு ஒப்பீடு - பொது மருத்துவமனைகள் **vs** தனியார் மருத்துவமனைகள்




ஃபோர்ட் அரசின் முன்னாள் சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் பதவியில் இருந்து விலகிய பிறகு தனியார் மருத்துவமனையை நடத்தும் நிறுவனம் ஒன்றின் பிரசாரகர் ஆனார். அந்த மருத்துவமனைக்கான நிதியுதவியை ஃபோர்ட் அரசு 278% ஆக அதிகரித்ததன் மூலம் எமது பொது மருத்துவமனைகளில் ஆகும் செலவைவிட இரட்டிப்புச் செலவை மக்களின் வரிப்பணத்தில் இருந்து தனியார் நிறுவனத்துக்குச் செலுத்தியது.
இதைத் தவிர, தனியார் பணியாளர் நிறுவனங்களுக்கு வழங்கும் நிதியினை நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களால் அதிகரித்தும் உள்ளதுடன் மக்களின் வரிப்பணத்தில் இருந்து பில்லியன் கணக்கிலான பணத்தினை இலாப நோக்கிலான தனியார் நீண்டகால சிகிச்சை இல்லங்களுக்கும் வழங்கியும் வருகின்றனர். பொது சுகாதார சேவைகள், முதன்மை மருத்துவம், மனநலம் போதைப்பொருட்களுக்கு அடிமை ஆதல் தொடர்பான பிரச்சனைகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை தனியார் வசப்படுத்தி வருகின்றனர்.

அனைத்துத் தரவுகள், தகவல்கள், ஆதாரங்களினையும் இங்கே காணலாம்.

**www.StopForProfitHealthCare.ca**

## ஒரு மில்லியன் மக்கள் தங்களின் குடும்ப மருத்துவர்களை இழந்துள்ளனர்



2016இல் ஃபோர்ட் அரசு பதவியேற்கும் முன் 1.3 மில்லியன் ஒன்ராறியோ மக்களுக்கு குடும்ப மருத்துவர் கிடைக்கவில்லை. 2024 ஜூலையில்இது 2.5 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.
.

## உள்ளூர் அவசர சிகிச்சை மையங்கள் அதிக அளவில் மூடப்பட்டுள்ளன




2023இல் உள்ளூர் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சை மையங்கள், பிரசவ பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள், அவசர மருத்துவ மையங்கள் போன்றன 1,199 முறை மூடப்பட்டுள்ளன. 2024 டிசம்பரில்அவசர சிகிச்சை பிரிவுகள் மூடப்படும் தடவைகள் இதுவரை இல்லாத அளவு அதிகரித்துள்ளது. ஃபோர்ட் அரசு 2018 இல் பதவியேற்கும் வரை அவசர சிகிச்சை பிரிவுகள் மூடப்படுவது என்பது மிக அரிதாகவே நிகழ்ந்துள்ளது.

## நோயாளிகள் அதிக அளவில் மருத்துவமனை தாழ்வாரங்களில் காத்திருக்கிறார்கள்



2024 செப்ரம்பரில் நாளொன்றுக்குச் சராசரியாக 2,000 நோயாளிகள் மருத்துவமனை தாழ்வாரங்களில் தூக்குப் படுக்கைகளில் காத்திருந்துள்ளனர். ஃபோர்ட் அரசு 2018இல் பதவியேற்கும் முன் இருந்த எண்ணிக்கையை விட இது இருமடங்காகி உள்ளது.

## தனியார் மருத்துவ நிலையங்கள் நோயாளிகளிடம் இருந்து ஆயிரக் கணக்காக டொலர்கள் கட்டணங்களைச் சட்டவிரோதமாக அறவிடுகின்றனர்



கனடா சுகாதாரச் சட்டத்தின்படி நோயாளிகளிடம் கட்டணங்கள் வசூலிப்பதுவும் மற்றும் பணக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்குவதும் சட்டவிரோதமானது. ஒன்ராறியோ பொது சுகாதாரத் திட்டம் (OHIP) அனைத்து மருத்துவ தேவைகளாலான அனைத்து அறுவை சிகிச்சைகளுக்கும் நோயறிதல் பரிசோதனைகளுக்கும் தேவையான கட்டணத்தை முழுமையாகச் செலுத்துகிறது. இருப்பினும், ஃபோர்ட் அரசினால் தனியார் மயமாக்கப்பட்ட அறுவை சிகிச்சை மையங்களில்நோயாளிகள் அதிக அளவிலான சட்டவிரோத கட்டணங்களை செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதைத் தடுப்பதற்குப் பதில் ஃபோர்ட் அரசு தனியார் மயமாக்கலை இன்னும் விரிவாக்கி வருகின்றது.